


புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் திருமயம் வடக்கு ஒன்றியம் ராங்கியத்தில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் இயற்கை வளம் மற்றும் சுரங்க துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். உடன் தலைமை கழக பேச்சாளர்கள் ஆரணி மாலா, சொ.தமிழினியன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் அண்ணாமலை ரகுபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அருண் சேகர். இளையராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கோவில் பூசாரிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கி வரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## திருவாரூரில் தமிழ்நாடு கோவில் பூசாரிகள் சங்கம் தீர்மானம்

மன்னார்குடி,ஜூன் 23-

கோவில் பூசாரிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு கோவில் பூசாரிகள் நலச் சங்கம் சார்பில் மன்னார்குடியில் நேற்று முன்தினம் நன்றி அறிவிப்பு மாநாடு நடந்தது.

தமிழ்நாடு முதலமைச்சராக மு க ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை அறிவித்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

அந்த வகையில், கடந்த 20 வருடங்களாக மாத ஊதியம் இல்லாமல் பணியாற்றி வந்த 19 ஆயிரம் பூசாரிகளுக்கு தற்போது மாத ஊக்கத் தொகையாக ரூபாய் 1500 வழங்கப்பட்டு வருகிறது.

கிராமப்புற கோயில்களுக்கு திருப்பணி நிதி ரூ 2.50 லட்சம் முயற்சி வழங்கப்படுகிறது. 60 வயதைக் கடந்த மூத்த பூசாரிகள் 5 ஆயிரம் பேருக்கு மாத ஓய்வூதியம் ரூபாய் 4 ஆயிரமாகஉயர்த்தி வழங்கப்படுகிறது.

ஒரு கால பூஜை நடந்த கோயில்களின் எண்ணிக்கையை 12 ஆயிரத்திலிருந்து 19 ஆயிரம் ஆக விரிவு படுத்தி அந்தக் கோயில்களுக்கான மின் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டது.

முன்னாள் முதல்வர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கினார். அந்தத் திட்டத்தை விரிவு படுத்தி 12 ஆயிரம் பூசாரிகளுக்கு ஸ்கூட்டர் வாங்க 12 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத வகையில் பொறுப்பேற்ற நான்கு வருடத்திற்குள் குமார் 3500 திருக்கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தி சாதனை படுத்தியது உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ஆன்மீக தலத்திலும் திமுக அரசு முத்திரை பதித்து வருகிறது.

இந் நிலையில்,கோவில் பூசாரிகளின் நலன் கருதி பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு கோவில் பூசாரிகள் நலச்சங்கம் சார்பில் திருவாரூர் மாவட்ட நன்றி அறிவிப்பு மாநாடு மன்னார்குடியில் நேற்று நடந்தது.

ராஜா கோபாலசாமி கோயில் அறங்காவலர் குழு தலைவர் கருடர் இளவரசன், மாவட்டச் செயலாளர் சேட்டு, மாவட்டத் துணைத் தலைவர் கலியமூர்த்தி, ஆலோசனை குழு தலைவர் ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டத் தலைவர் கோவிந்தராஜ் வரவேற்றார்.

மாநாட்டிற்கு தமிழ்நாடு கோயில் பூசாரிகள் நலச்சங்க மாநில தலைவர் வாசு தலைமை வகித்து நலவாரிய உறுப்பினர் படிவங்களை வழங்கியும், மூத்த பூசாரிகளின் சேவையை பாராட்டி அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கியும், தீர்மானங்களை விளக்கியும் பேசினார்.

மாநாட்டில், கிராமப்புற திருப்பணி கமிட்டியில் பூசாரிகளுக்கும் வாய்ப்பு வழங்க வேண்டும். நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு வருமானச் சான்று சமர்ப்பிக்க வேண்டியதில்லை என உத்தரவிட வேண்டும்.

நலவாரியம் மூலம் பூசாரிகளுக்கு நிதி வழங்க உரிய நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல் உறுப்பினர் பதிவு கட்டணம் பெறுவதை ரத்து செய்ய வேண்டும்.

ஒரு கால பூஜை நடைபெறும் கோவில்களில் பணியாற்று பூசாரிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். ஓய்வூதியம் கோரி விண்ணப்பிக்கும் பூசாரிகளின் விண்ணப்பங்களை 30 நாட்களுக்குள் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு கால பூஜை நடைபெறும் கோவில் பூசாரிகளுக்கு துரை ரீதியாக ஓய்வூதிய பெற நிதி ஒழிப்பு செய்ய வேண்டும். திருக்கோயில் ஆமணங்களிலும் வருவாய்த்துறை ஆவணங்களிலும் பசலி என்ற அந்நிய சொல்லை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பூசாரிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் மாவட்டம் நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. முடிவில் மாவட்ட மகளிர் அணி தலைவி மூர்த்தி தென்மொழி நன்றி கூறினார்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகரம்

## சிவகாசி மாநகரம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு!

"விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2025 ஜூன் 20 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி; விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு அ.சண்முகம் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு, **விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்ட பிரதிநிதியாக அ. சண்முகம்** 66-ஏ, சிவன் சன்னதி தெரு, சிவகாசி விருதுநகர் மாவட்டம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18,
நாள் : 21.6.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### வால்பாறை தொகுதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்

## அமுல் கந்தசாமி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 22–

வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமுல் கந்தசாமி அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமுல் கந்தசாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், வால்பாறை தொகுதி மக்களுக்கும், அ.தி.மு.க. கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியம், பெரியாக்குறிச்சி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை கட்டடத்தினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பொருட் களை வழங்கி முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர்பொ.இரத்தினசாமி, மற்றும் பலர்உள்ளனர்.




கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடி அருகில், கலைஞர் திடலில் நடைபெற்ற, 31 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியினை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தொடங்கி வைத்தார் இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு நான்காண்டு நிறைவடைந்ததையொட்டி, செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக, "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற நான்காண்டு சாதனை மலர் கையேட்டினை வழங்கினார். உணவு மற்றும் உணவுப் பொருள் உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் , ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செங்குட்டுவன், முருகன்,உள்ளிட்ட பலர் உள்ளனர்.




# தி.மு.க.
# இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 25.06.2025 | திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம் | சொரையப்பட்டு | ஸ்ரீராம் |
| 2 | | விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் | மதுரப்பாக்கம் | காசி விஸ்வநாதன்<br>வே.வல்லபராசு |
| 3 | 26.06.2025 | மணம்பூண்டி ஒன்றியம் | நாயனூர் | வழக்கறிஞர் யாசர் |
| 4 | | அரகண்டநல்லூர் பேரூர் | மார்க்கெட் வீதி | சேர்க்காடு கென்னடி |
| 5 | | காணை வடக்கு ஒன்றியம் | வெங்கமூர் | ஸ்ரீராம் |
| 6 | 27.06.2025 | காணை தெற்கு ஒன்றியம் | கருங்காலிப்பட்டு | எழும்பூர் கோபி |
| 7 | | திருவெண்ணெய்நல்லூர் பேரூர் | கடைவீதி | அப்துல் வகாப் |
| 8 | 28.06.2025 | காணை மத்திய ஒன்றியம் | செம்மேடு | எழும்பூர் கோபி |
| 9 | | முகையூர் வடக்கு ஒன்றியம் | வி.சித்தாமூர் | த.இன்பக்குமரன் |
| 10 | | திருக்கோவிலூர் நகரம் | ஐந்து முனை ரோடு | ரூ.கீர்த்தனா<br>வி.ஆர்.ரவிச்சந்திரன் |
| 11 | | விக்கிரவாண்டி பேரூர் | கடைவீதி | கே.அஸ்வின்குமார்<br>ப.அன்பரசு |
| 12 | 29.06.2025 | விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் | கோழிப்பண்ணை | ஆரணி மாலா |
| 13 | | திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம் | எரலூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| 14 | | கோலியனூர் மேற்கு ஒன்றியம் | சோழகனூர் | மு.ரோஜா<br>காசி.கலைச்செல்வன் |
| 15 | 30.06.2025 | முகையூர் தெற்கு ஒன்றியம் | கொங்கராயநல்லூர் | சேலம் சுஜாதா |
| 16 | | விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் | பொன்னாங்குப்பம் | சிறுவானூர் பரசுராமன் |

**விழுப்புரம்**
நாள் : 21.06.2025






கலைஞர் அவர்களின் பிறந்தநாள் செம்மொழி நாள் சிறப்புப்பொதுக்கூட்டம் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியில் நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.திரைப்பட நடிகர் எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தட்கோ தலைவர் நா.இளையராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் பா.ஆடலரசன் ,மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றிய செயலாளர்கள் வி.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், இரா. மனோகரன்,நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன்உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.